6. இறுதித் துணை நிதி அறிக்கை 1986-87 அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவையின் துணைத் தலைவர் அவர்களே,

1986-87 ஆம் ஆண்டிற்குரிய இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன். இந்த மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ. 450.69 கோடியில், வருவாய்க் கணக்கில் ரூ. 352.10 கோடியும் மூலதனக் கணக்கில் ரூ. 98.59 கோடியும் அடங்கும்.

1986-87 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டை தயாரிக்கும்போது எதிர்பார்க்கப்பட்ட செலவினங்கள் அனைத்திற்கும் போதுமான அளவிற்கு நிதி ஒதுக்க மிகுந்த கவனம் எடுத்துக்கொள்ளப்பட்டது. எனினும், மிக வேகமாக மாறி வருகின்ற காலக் கட்டத்தில், வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிற இந்த அரசு, இத்தேவைகளை நிறைவு செய்ய, செலவினங்களுக்கு அனுமதி வழங்க வேண்டிய அவசியமேற்படுகிறது. இதன் பயனாக, 1986-87-இல் புதிய செலவினங்கள் பலவற்றிற்கு அனுமதி வழங்கப்பட்டது. 1986-87 ஆம் ஆண்டுக்குரிய இறுதித் துணை மதிப்பீடுகளில் இந்த செலவினங்கள் அனைத்தும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. கேட்கப் பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளின் விவரம் இணைப்பில் கொடுக்கப் பட்டுள்ளது. அவ்வாறு சேர்க்கப்பட்டுள்ள செலவினங்களுள் முக்கியமான செலவினங்கள் சிலவற்றை ஈண்டுக் குறிப்பிட விழைகிறேன்.

மாநிலத்தில் நிலவும் வறட்சி நிலையைச் சமாளிக்க, வறட்சித் துயர் தணிப்புப் பணிகளுக்கான செலவுகள் பலவற்றிற்கு அரசு அனுமதி வழங்க வேண்டியிருந்தது. உழைப்பை நோக்கமாகக் கொண்ட திட்டப் பணிகளுக்கு இறுதித் துணை மதிப்பீட்டில் ரூ. 12.14 கோடி சேர்க்கப்பட்டுள்ளது. துளைக் கிணறுகள் தோண்ட ரூ. 5 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. லாரிகள் மூலம் தண்ணீர் எடுத்துச் செல்லவும், திறந்தவெளிக் கிணறுகள் அமைக்கவும் ரூ. 2.50 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

அரசு, மின்சக்திக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 1986-87 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட தொகைக்கு மேற்பட்டு உதவித் தொகையாக ரூ. 30 கோடி அனுமதிக்கப் பட்டுள்ளது. நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களும்,

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமும் தயாரிக்கும் கைத்தறித் துணிகளின் விற்பனைக்குத் தள்ளுபடி அளிப்பதற்காக அவற்றிற்கு உதவித் தொகை வழங்கும் வகையில் அரசு ரூ. 14.51 கோடி அனுமதித்தது. காவிரி கழிமுகப் பகுதியில் உள்ள உழவர்களுக்கு உற்பத்தி ஊக்கத் தொகை வழங்கும் கொள்கை தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகிறது. இதற்காக இறுதித் துணை மதிப்பீட்டில் மேலும் ரூ. 20.83 கோடி சேர்க்கப் பட்டுள்ளது. 31—3—1986 அன்றுள்ள நிலவரப்படி, நிலுவையாக உள்ள கூட்டுறவுக் கடன்களுக்கு உரிய வட்டி, அபராத வட்டி ஆகியவற்றைத் தள்ளுபடி செய்ய அரசு உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. இதற்காகத் துணை மதிப்பீட்டில் ரூ. 10 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

1986-87-இல், பொதுத் துறை நிறுவனங்கள் பலவற்றிற்கான ஒதுக்கீட்டை அரசு உயர்த்தியுள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வழிவகை முன்பணமாக ரூ. 15 கோடி அனுமதிக்கப்பட்டது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு ரூ. 5 கோடியும், தமிழ்நாடு தோல்பொருள் வளர்ச்சி நிறுவனத்திற்கு ரூ. 1 கோடியும், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திற்குக் கடனாக ரூ. 2.50 கோடியும் அனுமதிக்கப்பட்டன. இவை யாவும் இறுதித் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளன. ஜப்பான் நாட்டிடமிருந்து 2-வது, 3-வது கப்பல்களை வாங்க பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்குக் கடனாக ரூ. 5.85 கோடியை அரசு வழங்கியுள்ளது.

முன்பு கள் இறக்கி வந்தவர்களுக்குப் புதுவாழ்வு அளிக்க, கடனாகவும் மானியமாகவும் ரூ. 6 கோடி அனுமதிக்கப் பட்டுள்ளது. அதில் ரூ. 4 கோடி இறுதித் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. தேசிய எண்ணெய் வித்துக்கள் மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த ரூ. 2.88 கோடி அனுமதிக்கப்பட்டது.

அனைத்து வகை அரசுப் பணியாளர்களுக்கும் ஒரு மொத்த கருணைத் தொகை வழங்க அரசு அனுமதித்தது. இதற்கென எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ. 25 கோடி முன்பணமாக வழங்கப்பட்டது. இது இறுதித் துணை மதிப்பீட்டில் சேர்க்கப் பட்டுள்ளது. நகராட்சிகள் பலவற்றுக்கு அவற்றின் நிதி

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மார்ச் 24

நெருக்கடியைச் சமாளிக்க, வழிவகை முன்பணமாக பல்வேறு தவணைகளில் மொத்தம் ரூ. 2.60 கோடியை அரசு வழங்கி உள்ளது. தன்னிறைவுத் திட்டத்தின் நான்காம் கட்டத்தின் கீழ் மேற்கொண்ட பணிகளை முடிக்க 25 நகராட்சிகளுக்கு ரூ. 1.25 கோடி அனுமதிக்கப்பட்டது. துணை மதிப்பீட்டில் இத்தொகையும் சேர்க்கப்பட்டுள்ளது. 1986-87 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர்களுக்கு 8,222 வீடுகள் கட்ட ரூ. 4.95 கோடி செலவிடவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

1986-87 ஆம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீட்டில் கேட்கப் பட்டுள்ள நிதி ஒதுக்கங்களுக்கு ஒப்புதல் அளித்து, இந்த வளர்ச்சிப் பணிகளை அரசு மேற்கொள்ளத் தேவையான நிதி ஒதுக்கத்தை வழங்கி அனுமதி அளிக்குமாறு அவையை வேண்டி அமர்கிறேன்.

வணக்கம்.

7. அறிவிப்பு.

இறுதித் துணை நிதி அறிக்கை 1986-87 வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1986-87 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த இறுதித் துணை நிதி அறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கைகளின் மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள் அவற்றைப் பேரவையின் 190-வது விதிக்கிணங்க 25—3—1987 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள்ளாக பேரவைச் செயலகத்திடம் சேர்ப்பிக்க வேண்டும்.

[முற்பகல் 11.20]

8. வரவு-செலவுத் திட்டம் 1987-88 பொது விவாதம் (தொடர்ச்சி)

* **திரு. எஸ். வேணுகோபால்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை மீது என்னுடைய காங்கிரஸ் கட்சியின் சார்பாக சில விளக்கங்களை அளிக்க விரும்புகிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்த போது 45-வது பக்கத்தில் 'இந்த நிதிநிலை அறிக்கையின் மீது